TNVR250001352025

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வத்திராயிருப்பு

**முன்னிலை - திரு. M. இராமநாதன், B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வத்திராயிருப்பு

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை

**D.V. No. 3 / 2025**

1. சந்தோஷிதேவி
2. மைனர். ராம்கிஷோர்
3. மைனர் ராம்சரண்

(மேற்படி மைனர் 2,3 மனுதாரர்களுக்கு அடுத்த பாதுகாவலரும், சிநேகிதியுமான 1 ம் மனுதாரர் மூலம்)

:: புகார்தாரர்கள்

/எதிர்/

1. ரவிக்குமார்
2. சுந்தரிஅம்மாள்
3. ராதா :: எதிர்மனுதாரர்கள்

*******

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 19.02.2025 அன்று இறுதியான விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. அழகிரிசாமி அவர்கள் முன்னிலையாகியும், 1 ம்எதிர்மனுதாரர் தரப்பில் திரு. R. ஆரோக்கியசாமி அவர்கள் முன்னிலையாகியும், 2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு. K. கார்த்திக்ராஜா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரருக்கும் அவரது இரண்டு பிள்ளைகளுக்கும் குடும்ப வன்முறை சட்டம் 2005, பிரிவு 18, 19, 19(8), 20 மற்றும் 22ன் கீழாக உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**:-

2.1) மனுதாரருக்கும், 1ம்எதிர்மனுதாரருக்கும் கடந்த 13.03.2013ம் தேதியன்று மகாராஜபுரத்திலுள்ள பெருமாள் கோவிலில் வைத்து பெரியோர்களின் முன்னிலையில் திருமணம் நடைபெற்று, திருமணத்தின்போது 1ம் புகார்தாரருக்கு 45 பவுன் தங்க நகையும், 1ம் எதிர்மனுதாரருக்கு 2 பவுனில் கைச்செயினும், 3 பவுன் செயினும் மற்றும் ரொக்கம் ரூ.2,00,000/-, சுமார் ரூ.3,00,000/- மதிப்புள்ள பண்டபாத்திரங்கள் வரதட்சணையாக வழங்கப்பட்டு, திருமணத்தின்போது 1ம்எதிர்மனுதாரர் திருவில்லிபுத்தூரின் வழக்கறிஞராகவும், 1ம் மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் ராம்கிஷோர் என்ற 5 வயது ஆண் குழந்தையும், ராம்சரண் என்ற 2 வயது ஆண் குழந்தையும் உள்ளனர். 1ம்புகார்தாரரும், 1ம்எதிர்மனுதாரரும் எதிர்மனுதாரரின் வீட்டில் மாமனார் மற்றும் மாமியாருடன் சுமார் 6 மாதம் வரை வாழ்ந்து வந்தனர். பின்னர் 1ம் எதிர்மனுதாரர், 2,3 எதிர்மனுதாரர்களின் பேச்சை கேட்டு 1ம் எதிர்மனுதாரர், 1ம் புகார்தாரரிடம் அடிக்கடி வீண் தகராறு செய்தும், 1ம் புகார்தாரரை கர்ப்பிணி பெண் என்றும் பாராமல் 1ம்எதிர்மனுதாரர் கணவர் என்ற முறையில் செய்ய வேண்டிய கடமையும் செய்யாமல் 1ம் புகார்தாரரிடம் கூடுதல் வரதட்சனை கேட்டு தொடர்ந்து கொடுமை செய்து வந்தும், புகார்தாரர்களும், 1ம்எதிர்மனுதாரரும் மைனர் குழந்தையுடன் வீட்டில் குடியிருந்து வரும்போது மேற்படி வீட்டில் புகார்தாரர்களை குடியிருக்க கூடாது என்று கூறி வீட்டை விட்டு வெளியேறுமாறு 2,3 எதிர்மனுதாரர்கள் கட்டாயப்படுத்தியுள்ளார்.

2.2) 1ம்எதிர்மனுதாரர், புகார்தாரரிடம் ஒத்திக்கு பணம் ரூ.1,00,000/-த்தை புகார்தாரரின் பெற்றோர்கள் கொடுத்தும், 1ம்புகார்தாரரின் அம்மாவுக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 40 செண்ட் மாந்தோப்பை 1ம் புகார்தாரருக்கு 2014ம் வருடம் தானமாக எழுதி வைத்தும், 1ம் புகார்தாரர் திருமணத்தின்போது கொண்டு வந்த 45 பவுண் தங்க நகையும் எதிர்மனுதாரர் 1ம் புகார்தாரரிடமிருந்து பிடிங்கி வைத்துக் கொண்டதாகவும், மேலும், சுமார் ரூ.1,00,000/- மதிப்புள்ள தேக்கு மரங்களை 1ம் எதிர்மனுதாரரின் வீட்டுக்கு எடுத்து சென்றதாகவும், 1ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞராக பணியாற்றி வருவதாகவும், 1ம் புகார்தாரருக்கு கணவர் என்ற முறையில் செய்ய வேண்டிய கடமைகளை செய்யாமல் 2,3 எதிர்மனுதாரர்களின் பேச்சை கேட்டு செலவிற்கு பணம் கொடுக்காமல் 1ம் புகார்தாரரின் பெற்றோர்களே அன்றாட செலவுகளுக்கு பணம் கொடுத்து வந்ததாகவும், 2,3 மைனர் புகார்தாரர்களுடன் தகப்பனார் என்ற முறையில் அன்பாக இல்லாமல் கோபமாக பேசியும், புகார்தாரர்களை அடித்து கொடுமைப்படுத்தி துன்புறுத்தி வந்துள்ளார்.

2.3) கடந்த 03.03.2017 ம்தேதி முதல் அடித்து கொடுமை செய்தும், 1ம் எதிர்மனுதாரரை அடித்ததில் புகார்தாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு தனியார் மருத்துமனையில் சிகிச்சை எடுத்தும், பின்னர் புகார்தாரரின் உறவினர்கள் 1ம் எதிர்மனுதாரரிடம் 1ம் புகார்தாரருடன் சேர்ந்து வாழுமாறு அறிவுறுத்தியதை மறுத்தும், 2,3 எதிர்மனுதாரர்கள் கூடுதல் வரதட்சனை கேட்டு பொது இடத்தில் வைத்து அசிங்கமாகவும், புகார்தாரரை உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் கொடுமை செய்ததால் பெற்றோர் வீட்டில் மைனர் குழந்தைகளுடன் குடியிருந்து வந்தும், 1ம் புகார்தாரரிடம் எந்தவிதமான தொடர்பும் இல்லாமல் நாளது தேதி வரை பிரிந்து வாழ்ந்து வருகிறார். மேலும், 1ம் எதிர்மனுதாரர் புது வீடு கட்டி குடிபெயர்ந்தபோதும் புகார்தாரர் மற்றும் புகார்தாரரின் குடும்பத்தினரை அழைக்கவில்லை என்றும், புகார்தாரர் திருமணத்தின் போது கொண்டு வந்த 45 பவுண் மற்றும் 1ம் எதிர்மனுதாரருக்கு போடப்பட்ட 8 பவுண் மற்றும் சுமார் ரூ.3,00,000/- மதிப்புள்ள பண்ட பாத்திரங்கள் 1ம் புகார்தாரரின் பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல், புகார்தாரர் 10,12 வகுப்பு

மதிப்பெண் சான்றிதழ், B.Sc. Computer மதிப்பெண் சான்றிதழ், வேலை வாய்ப்பு அட்டை, 1ம் புகார்தாரரின் குடும்ப அட்டை, குழந்தைகளின் பிறப்பு சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை மற்றும் 1ம் புகார்தாரரின் குழந்தைகளின் துணிமணிகள் ஆகிய பொருட்களும் 1ம் எதிர்மனுதாரரிடம் உள்ளது.

2.4) 3ம் புகார்தாரரான மைனர் ராம்கிஷோர்ட மகாராஜபுரத்திலுள்ள அங்காள ஈஸ்வரி நர்சரி பிரைமரி ஸ்கூலில் 1ம் வகுப்பு படித்தும், 1ம் புகார்தாரரே கடந்த 2017ம் வருடம் முதல் 2ம் மைனர் புகார்தாரருக்கு படிப்பு கல்வி கட்டணம், உணவு, உடை, மருத்துவம் போன்ற வசதிகளுக்கும், மைனர் புகார்தாரரை பராமரிப்பு செலவுகளுக்கு உறவினர் மற்றும் நண்பர்களிடம் கடன் வாங்கி நாளது தேதி வரை செலவு செய்து வருகிறார். 1ம் எதிர்மனுதாரர் திருவில்லிபுத்தூர், மகாராஜபுரம் கிராமத்தில் குடியிருந்து வருவதை மறைத்து நாமக்கல் மாவட்டம், பரமத்தி தாலுகாவில் குடியிருந்து வருவதுபோல் திட்டமிட்டு மோசடியாக ஆவணத்தை உற்பத்தி செய்தும், 1ம் எதிர்மனுதாரர், 1ம் புகார்தாரரிடம் பொய்யான காரணமாக கூறியும் விவாகரத்து கோரி பரமத்தி, சார்பு நீதிமன்றத்தில் HMOP.No.11/2019 மனு தாக்கல் செய்து நிலுவையிலிருந்து வருகிறதென்றும், 1ம்புகார்தாரர், 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு தயாராக உள்ள காரணத்தினால் 1ம் எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தாரும் தரும் இம்சைகளை பொறுத்துக் கொள்ள முடியாத காரணத்தினால் எதிர்மனுதாரர்கள் மீது மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரை**

3.1) 1ம்எதிர்மனுதாரர் தரப்பில், 1ம்புகார்தாரருக்கும், 1ம்எதிர்மனுதாரருக்கும் கடந்த 13.0.2013ம் தேதியன்று திருமணம் நடைபெற்று, எதிர்மனுதாரர்களின் திருமணத்திற்கு எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் எதிர்ப்பு தெரிவித்து, திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவில்லையென்றும், மேற்படி செலவுகளை எதிர்மனுதாரரே ஏற்றுக்கொண்டும்,

புகார்தாரரின் பெற்றோர் வசமே உள்ளதென்றும், எதிர்மனுதாரரின் பெற்றோருக்கு சொந்தமான வீட்டில் எதிர்மனுதாரரும், புகார்தாரரும் தனிக்குடித்தனம் நடத்தி வந்ததாகவும், புகார்தாரரின் தோழியின் தாயார் பெருமாளம்மாள் புகார்தாரருக்கு கர்ப்ப காலத்தில் செய்ய வேண்டிய வளைகாப்பு மற்றும் குழந்தை பேறு காலத்தில் செய்ய வேண்டிய சடங்குளை செய்ததாகவும், குழந்தையின் பராமரிப்பு செலவுகள் அனைத்தையும் 1ம் எதிர்மனுதாரர் தான் செய்து வந்ததாகவும், புகார்தாரருக்கு செய்யாத செலவுகள் செய்து வந்ததாக கூறி வந்தது தொடர்பாக புகார்தாரரின் பெறற்றோர்களை அழைத்தபோது, புகார்தாரரின் பெற்றோர்கள் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு வந்து வாசலில் நின்று கொண்டு எதிர்மனுதாரரை கெட்ட வார்த்தையால் திட்டி, எந்தவொரு காரணமின்றி புகார்தாரரின் பெற்றோர்கள் அவர்களது வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டார்கள்.

3.2) கடந்த 08.11.2014ம் தேதியிலிருந்து சுமார் ஆறு மாத காலமாக எதிர்மனுதாரர், எதிர்மனுதாரரின் குழந்தையை பார்ப்பதற்காகவும், எதிர்மனுதாரரின் குழந்தைக்கு அன்றாட தேவைகளுக்கு பணம் கொடுப்பதற்காக புகார்தாரரின் வீட்டிற்கு சென்றபோது, புகார்தாரரின் குழந்தையை பார்க்கவிடாமல் புகார்தாரரின் தகப்பனார் மகாலிங்கம், தாயார் சந்தான மாரி மற்றும் அவருடைய தாத்தா கருப்பையா மற்றும் புகார்தாரர் ஆகியோர்கள் சேர்ந்து கொண்டு எதிர்மனுதாரை கெட்ட வார்த்தைகளால் திட்டி அசிங்கப்படுத்தி துரத்திவிட்டதால் வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் புகார் மனு எண்.301/2015ன் படி புகார் கொடுத்ததாகவும், அதன்பிறகு ஊர் பெரியோர்கள் முன்னிலையில் பேசியதில், புகார்தாரர், எதிர்மனுதாரரோடு நாமக்கல் மாவட்டத்திற்கு தனிக் குடித்தனமாக வாடகை வீட்டிற்கு தனிக்குடித்தனம் வந்ததாகவும், எதிர்மனுதாரர் காலை 09.00 மணிக்கு சென்றுவிட்டு மாலை 05.00 மணிக்கு வீட்டிற்கு வர வேண்டுமென்றும், தொடுதடை அலைபேசியை உபயோகிக்கக் கூடாது என்றும், எதிர்மனுதாரர் எங்கு போக வேண்டுமானலும் புகார்தாரரின் தாயாரிடம் சொல்லி விட்டு செல்ல வேண்டுமென்றும், எதிர்மனுதாரர் புகார்தாரரிடம் ஒரு குழந்தை போதும் என்று கூறியதற்கு, புகார்தாரரின் தாயாரின் பேச்சை கேட்டு குழந்தையை

பெற்றுக்கொள்வதாகவும், இது குறித்து புகார்தாரரின் தாயாரிடம் கேட்டதற்கு, எதிர்மனுதாரரை கெட்ட வார்த்தையால் திட்டி, காலை உடைத்து புகார்தாரரின் தாயார் புகார்தாரரை 13.05.2016 ம் தேதியன்று அழைத்து சென்றதாகவும், இரண்டு வருடங்களுக்கு மேலாக புகார்தாரரும், 1ம் எதிர்மனுதாரரும் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், புகார்தாரர் எதிர்மனுதாரருடன் குடும்பம் நடத்துவார் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டார்.

3.3) புகார்தாரர், புகார்தாரரின் பெற்றோர், எதிர்மனுதாரர் வழக்கறிஞர் கண்ணபிரான் அலுவலகத்தில் சேர்ந்து வாழ்வதற்காக பலமுறை பஞ்சாயத்து பேசியதில், புகார்தாரர் எதிர்மனுதாரரை நிம்மதியாக வாழவிடமாட்டேன் என்றும், நானும் சேர்ந்து வாழ மாட்டேன் என்று கூறியும், புகார்தாரரும், புகார்தாரரின் பெற்றோரும் எதிர்மனுதாரரை பார்த்து உனக்கு உனது பெற்றோரின் ஆதரவும் இல்லை, உறவினர்களின் ஆதரவும் இல்லை நீ ஒரு அனாதை உன்னை அடித்து கொன்றால் கூட உன்னை கேட்பதற்கு ஆள் இல்லை என்றும், எதிர்மனுமாரர், வழக்கறிஞர் கண்ணபிரானின் அலைபேசியில் புகார்தாரரின் அலைபேசிக்கு தொடர்பு கொண்டு பேசியபோது எதிர்மனுதாரரை கெட்ட வார்த்தைகளால் திட்டி இணைப்பை துண்டித்துவிட்டதாகவும், இந்நிலையில், எதிர்மனுதாரர் புகார்தாரர் மீது நாமக்கல் மாவட்டம், பரமத்தி சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கேட்டு வழக்கு எண்.11/2019 தாக்கல் செய்து, எதிருரைக்காக வழக்கு நிலுவையில் உள்ளதென்றும், 23.04.2019 ம் தேதியன்று திருவில்லிபுத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது புகார்தாரர் புகார் கொடுத்தும், பிரச்சினையை நீதிமன்றத்தின் மூலமாக தீர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டதாகவும், பின்னர் திருவில்லிபுத்தூர் குடும்ப நல நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ்வதற்காக புகார்தாரர் எதிர்மனுதாரர் மீது வழக்கு எண்.58/2019 வழக்கு தொடுத்து நிலுவையில் உள்ளதென்றும், புகார்தாரர் க.எண்.5/85 கொண்ட சொந்தமான வீட்டில் புகாரதாரர் வசித்தும், புகார்தாரருக்கு சொந்தமாக 2 ஏக்கர் மாந்தோப்பு, 10 ஏக்கர் காடு அதில் 5 ஏக்கர் மாந்தோப்பு, 2 ஏக்கர் தென்னந்தோப்பு, 3 ஏக்கர் நெல் பயிர் செய்தும்,

புகார்தாரரின் தகப்பனார் ரூ.30,00,000/-த்திற்கு வெளியில் வட்டிக்கு விட்டு சம்பாதித்தும், ஓய்வூதிய வருமானமாக மாதம் ரூ.38,000/-த்திற்கு வருமானம் ஈட்டி வருவதால், புகார்தாரரும், மைனர் குழந்தைகளும் செல்வ செழிப்பான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். மேலும், புகார்தாரர் மனுவின் கருப்பொருளை மறைத்து (Suppression of Material facts) தாக்கல் செய்துள்ள இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி 1ம்எதிர்மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4. <u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரை</u>**

4.1) 1ம் எதிர்மனுதாரருக்கு அவரது சகோதரர் இராஜேஷ்கண்ணன் பெண் பார்த்து திருமணம் செய்து வந்ததால் 2ம்எதிர்மனுதாரர், 1ம் எதிர்மனுதாரரிடம் எவ்விதமான பேச்சு வார்த்தையும் இல்லை என்றும், 1ம் எதிர்மனுதாரரும், 1ம் புகார்தாரரும் நாமக்கல் மாவட்டத்தில் தனிகுடித்தனம் இருந்தபோது புகார்தாரரின் பெற்றோர்கள் பிரச்சினை செய்ததாகவும், 1ம்எதிர்மனுதாரருடன் யாரும் இல்லாததை சாதகமாக கொண்டு 1ம் புகார்தாரரின் பெற்றோர்கள் 1ம்எதிர்மனுதாரரை அடித்து காயப்படுத்தியும், 1ம் புகார்தாரரின் தகப்பனார் 1ம் எதிர்மனுதாரரின் காலில் கல்லால் எறிந்து எலும்பு முறிவை ஏற்படுத்தியும், எலும்பு முறிவு ஏற்பட்டதால் சிகிச்சை பெறவும் சில நாட்கள் ஓய்வு எடுப்பதற்காகவும் 1ம் எதிர்மனுதாரர் சொந்த ஊருக்கு வந்ததாகவும், 3ம்எதிர்மனுதாரர் ஊர் பெரியோர்களையும் அழைத்துக்கொண்டு 1ம்புகார்தாரர் வீட்டிற்கு சென்று அவரது பெற்றோர்களிடம் 1ம்எதிர்மனுதாரர், 1ம் புகார்தாரருடன் சேர்ந்து வாழ விரும்புவதால் 1ம்புகார்தாரரரை அனுப்புமாறு அழைத்தபோது, ஊர் பெரியோர்களிடம் சாப்பாட்டிற்கு வழி இல்லையென்றும், மகளையும், குழந்தைகளையும் எங்களால் பார்த்துக் கொள்ள முடியும் என்று கூறியதால், 1ம்எதிர்மனுதாரரை 1ம்புகார்தாரரின் பெற்றோர்கள் அடித்துவிட்டு 1ம்புகார்தாரரையும், மைனர் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டும், அனைத்து பொருட்களையும் வாகனத்தின் மூலம் ஏற்றிக்கொண்டு 1ம்புகார்தாரரின் பெற்றோர்கள் வீட்டிற்கு அழைத்து வந்தனர்.

4.2) 1ம் புகார்தாரர் சேர்ந்து வாழ்வதற்கு 2 வருடங்களுக்கு மேலாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு தற்போது மனுவிற்காக சேர்ந்து வாழ தயாராக இருப்பதாகவும், 1ம் எதிர்மனுதாரர் அவரது நண்பர்கள் மூலமாகவும், ஊர் பெரியோர்கள் மூலமாகவும் பலமுறை சமாதானம் பேசியதற்கு எந்தவிதமான பதிலும் தெரிவிக்காமல் இருந்துவிட்டும், 1ம்எதிர்மனுதாரரை சாப்பாட்டிற்கு வழியில்லாமல் இருப்பதாக கூறியும், எதிர்மனுதாரர்களுக்கு வீண் அலைச்சலையும், மனஉளைச்சலையும் ஏற்படுத்த வேண்டுமென்றும், 2,3 எதிர்மனுதாரரின் நற்பெயருக்கு கலங்கம் விளைவிக்கும் எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். எனவே, புகார்தாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி 2 ம் எதிர்மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

5) இவ்வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களிடமிருந்து கோரும் பரிகாரங்கள் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

6) மனுதாரர் தரப்பில் 1ஆம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும், எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணையின் மூலமாக எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.19 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.சா.1 ஆக 1ம்எதிர்மனுதாரர் விசாரிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின் போது ம.சா.ஆ.6 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) இருதரப்பிலும் மனு மற்றும் வாதுரைகள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு, 1 முதல் 3 எதிர்மனுதாரர்களால் மனுதாரருக்கு குடும்ப வன்முறை ஏற்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். இவ்வழக்கில் மனுதாரர் கூறியுள்ள குற்றச்சாட்டுகளை காணும்போது எதிர்மனுதாரர்கள், மனுதாரரை மன ரீதியாக, உடல் ரீதியாக (Physical abuse) மற்றும்

வார்த்தையால் மற்றும் மன ரீதியான (Verbal and Emotional), வரதட்சணை கேட்டு துன்புறுத்தல் (Unlawful demand for dowry மற்றும் பொருளாதார ரீதியான (economical) வன்முறைகள் செய்ததாக கூறியுள்ளார். மனு மற்றும் எதிருரை ஆகியவைகளை பரிசீலனை செய்து பார்க்கையில், 1வது மனுதாரருக்கும், 1வது எதிர்மனுதாரரக்கும் இடையே நடைபெற்ற திருமணம் குறித்தும், திருமணத்தின் பலனாக 2 மற்றும் 3 இளவர் குழந்தைகள் பிறந்ததும் இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதால், அது குறித்து கூடுதல் பரிசீலனை தேவையற்றது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7.1) இம்மனுவினை பொறுத்த வரையில், மனுவானது 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்திருந்த போதிலும், மனுதாரர் தன்னுடைய குறுக்கு விசாரணையில், 1வது மனுதாரரும், 1வது எதிர்மனுதாரரும் திருமணம் முடிந்து தனித்தனியாக வசித்து வருகிறார்கள் என்று கூறியுள்ளதிலிருந்து, மனுதாரரும், அவருடைய கணவருமான 1வது எதிர்மனுதாரரும், மற்ற 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் பங்குரிமை வீட்டில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள் என்று கருத இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ், வழக்கில் குடும்ப உறுப்பினர்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டுமேயானால், வழக்கு தரப்பினர்கள் பங்குரிமை வீட்டில் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்திருக்க வேண்டும் என்பது சட்டத்தின் நிலைப்பாடாகும். அவ்வாறில்லாதபட்சத்தில், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் பங்குரிமை வீட்டில் கூட்டுக் குடும்பமாக வசிக்காதவர்களை பொறுத்த வரையில், பாதிக்கப்பட்டவருக்கு வன்முறை இழைக்கப்பட்டதாக கருத இயலாது என முடிவு செய்து, 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் பங்குரிமை வீட்டில் கூட்டுக் குடும்பமாக வசித்து வரவில்லை என்று மனுதாரர் ஒப்புக் கொண்டுள்ள நிலையில், அவர்களால் குடும்ப வன்முறை மனுதாரருக்கு இழைக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7.2) மனுதாருக்கு 1வது எதிர்மனுதாரரால் மனுவில் குறிப்பட்டுள்ளவாறு குடும்ப வன்முறைகள் இழைக்கப்பட்டதா என்பது குறித்தும், மனுதாரர்களுக்கு 1வது எதிர்மனுதாரருக்கு எதிராக குடும்ப வன்முறைகள் மேற்கொண்டு நிகழாமலிருக்க பாதுகாப்புக் கட்டளை பிரிவு 18 ன் கீழ் பெறத் தகுதியுடையவர்களா என்பது குறித்து மனுதாரர்கள் தரப்பிலும், எதிர்மனுதாரர்கள் தரப்பிலும் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து பார்க்கையில், மனுதாரர்கள் மனுவில் 1வது எதிர்மனுதாரர் பல்வேறு சூழ்நிலைகளில் 1வது மனுதாரரை மன ரீதியாகவும், உடல் ரீதியாதகவும் துன்புறுத்தி குடும்ப வன்முறைக்கு ஆளாக்கினார் என்ற வெற்று குற்றச்சாட்டுகள் முன்னிலைப்படுத்தியிருந்தாலும், எந்தெந்த தேதிகளில் 1வது எதிர்மனுதாரரால் 1வது மனுதாரர் குடும்ப வன்முறைக்கு ஆளாக்கப்பட்டார் என்ற குறிப்பிட்ட சங்கதிகள் எதுவும் மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

7.3) ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.1 குறுக்கு விசாரணையின் பொழுது மா.சா.1 மூலம் குறியீடு செய்யப்பட்ட எ.மா.சா.ஆ.3 மற்றும் எ.மா.சா.ஆ.4 ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கையில், 1வது மனுதாரருக்கும், 1வது எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு மற்றும் 1வது எதிர்மனுதாரரால் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லக்கூடிய வன்முறைகள் குறித்தும் மனுதாரர் திருவில்லிப்புத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்ட விபரம் தெரியவருகிறது. ஆனால், மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்டுள்ளவாறு, 1வது மனுதாரரை 1வது எதிர்மனுதாரரரை ம.சா.ஆ.2 மற்றும் எ.மா.சா.ஆ.3 மற்றும் எ.மா.சா.ஆ.4 சான்றாவணங்களில் கண்டுள்ள வன்முறைக்கு மாறாக பல்வேறு சூழ்நிலைகளில் இழைக்கபட்டதாக சொல்லக்கூடிய கூடுதல் வரதட்சனை கேட்டது சம்பந்தமாக 1வது மனுதாரர் தரப்பில் சான்றளிக்கும் விதமாக எந்த ஆவணங்களும் முன்னிலைப்படுப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

7.4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு எதிராக 1வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில், மனுதாரர்கள் குறிப்பிடாத குற்றச்சாட்டான, 1வது மனுதாரர் 2வது முறையாக கருவுற்றிருக்கும் பொழுது, அதைக் கருக்கலைவு செய்யக் கேட்டு அதற்கு 1வது மனுதாரரும் சம்மதம் தெரிவித்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ள நிலையில், மேற்படி 1வது மனுதாரரால் கொடுக்கப்பட்டதாக சொல்லக்கூடிய கருக்கலைப்பு சம்மதம் குறித்து 1வது எதிர்மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்படாமல் விடப்பட்டுள்ளதால், கருக்கலைப்பு பற்றி 1வது எதிர்மனுதாரர், 1வது மனுதாரரிடம் பேசியது, 1வது எதிர்மனுதாரர், 1வது மனுதாரரை மனதளவில் துன்புறுத்தியதாகவே இந்நீதமன்றம் கருதுகிறது.

7.5) மேலும் இருதரப்பிலும் காவல் நிலையத்தில் வைத்து சமாதானம் பேசிய பொழுது, இரு தரப்பினர்களும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, இரு தரப்பினர்கள் மீதும் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கானது சமாதான முறையில் முடித்து வைக்கப்பட்டதாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள நிலையில், இரு தரப்பினர்களின் நடத்தை குறித்த அனுமானத்தினை இந்நீதிமன்றத்திற்கு முன்னிலைப்படுத்துவதாக அமைவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

7.6) மேலும், மனுதாரர்களை பிரிந்து 1வது எதிர்மனுதாரர் தனியாக வாழ்ந்து வருவதும், 1வது மனுதூரரும், இளவர் குழந்தைகளும் தனியாக வாழ்ந்து வருவதுமாக மனுவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டிற்கு மாறாக 1வது எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித மறுப்பும் தெரிவிக்கப்படாத நிலையில், 1வது எதிர்மனுதாரர், மனுதாரர்களை பிரிந்து தனித்தனியாக வேறு வேறு வீட்டில் குடியிருந்து வருவதாக இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. மேலும், 1வது மனுதாரர் வாழ்வுரிமை பரிகாரம் கேட்டு மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் HMOP 58/2019 என்ற வழக்கில் 1வது மனுதாரருக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையிலும், 1வது எதிர்மனுதாரர் 1வது மனுதாரருக்கு எதிராக விவாகரத்து கேட்டு HMOP 7/2020 என்ற வழக்கானது தள்ளுபடி

செய்யப்பட்ட நிலையிலும், மேற்படி தள்ளுபடி உத்தரவின் மீது மேல்முறையீடு தாக்கல் செய்யப்படாமல், நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் இருந்து வருவதும், மனுதாரர்களுக்கு மனரீதியாக வன்முறைகள் நிகழ்த்தப்படுவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

7.7) மேலும் மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களும், 1வத எதிர்மனுதாரரும் பிரிந்து வாழ்வதாக இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட போதிலும், மனுதுாரர்கள் தரப்பில் 1வது எதிர்மனுதாரர் எவ்விதமான பொருளுதவி மற்றும் பொருளாதார உதவிகள் செய்யவில்லை என்று குறிப்பிட்டு குற்றச்சாட்டினை முன்வைத்துள்ள நிலையில், 1வது எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சிகளும், சான்றாவணங்களும் மனுதாரர்களும் 1வது எதிர்மனுதுாரரால் பொருளுதவி மற்றும் பொருளாதார உதவி செய்யப்பட்டதாக முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், 1வது எதிர்மனுதாரருக்கு எதிராக குற்ற பல்வகை மனு எண் 1228/2019, 25.09.2019 அன்று 1வது மனுதாரருக்கு மாதம் ரூ. 2000/-ம், இளவர் 2 மற்றும் 3 மனுதாரர்களுக்கு மாதம் ரூ. 1500/- வீதம், இடைக்கால ஜீவனாம்சமாக வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதிலும், மேற்படி நீதிமன்ற உத்தரவினை மதிக்காமல் இடைக்கால ஜீவனாம்ச தொகை செலுத்தாமல் இருந்து வந்த 1வது எதிர்மனுதாரருக்கு எதிராக பிரிவு 31ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு சுருக்க முறை வழக்காக இந்நீதிமன்றத்தில் 594/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு முழுவிசாரணைக்குப் பின்பு, 1வது எதிர்மனுதாரர் குற்றவாளி என இந்நீதிமன்றத்தால் கடந்த 29.05.2026 அன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

7.8) மேற்படி நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றாமலும், மனுதாரர்களுக்கு பொருளாதார உதவிகள் செய்து வந்ததாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படாமல் விடப்பட்டிருப்பதும், மனுதாரர்களுக்கு, 1வது எதிர்மனுதுாரரால் பொருளாதார குடும்ப வன்முறைகள் இழைக்கப்பட்டதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், STC 594/2025 என்ற வழக்கில், நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால ஜீவனாம்ச உத்தரவை நிறைவேற்றாததால், 1வது எதிர்மனுதாரர்

குற்றவாளி என தீர்வு கண்டுள்ளதாலும், 1வது எதிர்மனுதாரரால் மனுதாரர்களுக்கு வன்முறைகள் நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதும், குற்றவாளி என தீர்வு கண்ட போதிலும், இடைக்கால உத்தரவினை நிறைவேற்றாமல் இருந்து வரும் 1வது எதிர்மனுதாரரின் செய்கையானது நீதிமன்ற உத்தரவினை அவமதிக்கும் வகையில் நடந்துக் கொள்வதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

7.9) மேலும், மனுதாரர்கள் பங்குரிமை வீட்டில் வசிக்கவில்லை என்பது இருதரப்பிலும் ஒப்புக் கொண்டுள்ளபடியால், மனுதாரர்களுக்கு, 1வது எதிர்மனுதாரர் இருப்பிட வசதியுரிமை செய்துக் கொடுக்க கடமைப்பட்டுள்ளார் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், பங்குரிமை வீட்டில் மனுதாரர்கள் வசித்து வந்தால், மனுதாரர்களுக்கு 1வது எதிர்மனுதாரரால் மேற்கொண்டும் குடும்ப வன்முறைகள் நிகழ்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுவதால், மனுதாரர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, மனுதாரர்களுக்கு வசிப்பிட உரிமை பங்குரிமை வீடு அல்லாமல், மனுதாரர்கள் பாதுகாப்பான சூழலில் வசிப்பதை உறுதி செய்யும் விதமாக தனியாக வாடகைக்கு வீடு தேர்வு செய்து, வீட்டிற்கான முன் தொகை மற்றும் வாத வாடகை தொகையை 1வது எதிர்மனுதாரரே செலுத்துவதே நலன் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7.10) மனுதாரருடன் சேர்ந்து வாழுமாறு மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றம் HMOP 58/2019 என்ற வழக்கில் உத்தரவு பிறப்பித்திருந்த போதிலும், மேற்படி உத்தரவை நிறைவேற்றாமலும், இடைக்கால ஜீவனாம்ச தொகையை செலுத்தாமலும், தகப்பனார் மற்றும் கணவர் என்ற முறையில் மனுதாரர்களுக்கு எவ்வித கடமைகளையும் செய்யாமல் இருந்து வரும் 1வது எதிர்மனுதாரரின் செய்கையானது மனுதாரர்களை மனரீதியாக துன்புறுத்தும் விதமாக அமைந்திருப்பதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7.11) மனுதாரர்கள் தரப்பில், திருமணத்தின் பொழுது, அதற்கு பின்னிட்டும் 1வது மனுதாரரின் பெற்றோர்களால் 1வது மனுதாரருக்கும், 1வது எதிர்மனுதாரருக்கும் கொடுக்கப்பட்டதாக

சொல்லக்கூடிய தங்க நகைகள், பண்ட பாத்திரங்கள் மற்றும் 1வது மனுதாரருக்கு சொந்தமான கல்வி தகுதி சான்றிதழ்கள் மற்றும் சொத்து உரிமை ஆவணங்கள் 1வது எதிர் மனுதாரர் வசம் வைத்துவிட்டு அதை தர மறுப்பதாகவும், அதை பெற்றுத் தர 1வது மனுதாரரால் காவல் நிலையத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்னிட்டு நீதிமன்றம் மூலம் முறையாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடிவு செய்து மனு முடித்து வைக்கப்பட்டுள்ள விபரம் தெரிய வருகிறது. மேலும், 1வது மனுதாரர் இந்த மனுவிலும், மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள தங்க நகைகளின் அளவுகளில் முரண்பாடு பட்டு தெரியவருகிறது.

7.12) மேலும், மனுதாரர்கள் தரப்பில் 1வது எதிர்மனுதாரர் வசமிருப்பதாகச் சொல்லக்கூடிய பொருட்களின் பட்டியல் அடங்கிய ஆவணப்பட்டியல் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுப்படவில்லை. இருப்பினும் சூழ்நிலைகளை கருதி மனுதாரர்களுக்கு சொந்தமான 1வது மனுதாரரின் பெற்றோரால் 1வது மனுதாரருக்கும், 1வது எதிர்மனுதாரருக்கும் திருமணசமயத்திலும், அதற்கு பின்பும் அணிவிக்கப்பட்ட தங்க நகைகள், பண்ட பாத்திரங்கள், சான்றிதழ்கள் மற்றும் உரிமை ஆவணங்களை 1வது மனுதாரர் வசிமிருந்து 1வது மனுதாரருக்கு ஒப்படைக்க உத்தரவிடுவது நியாயம் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டும், பகுதியாக தள்ளுபடி செய்யப்பட்டும் செய்து உத்தரவிடப்படுகிறது. 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, மனுதாரருக்கும், அவரது குழந்தைகளுக்கும் ஆதரவாக பிரிவு 18 ன் கீழ் பாதுகாப்பு உத்தரவிடப்பட்டு, மனுதாரரையோ, மனுதாரரின் குழந்தைகளையோ எந்த வகையிலும் 1வது எதிர்மனுதாரரோ அல்லது அவரது வகையாட்களோ துன்புறுத்தக் கூடாது என்று பாதுகாப்பு கட்டளை உத்தரவு பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது.

மேலும், மனுதாரரும், அவரது இளவர் குழந்தைகளின் பாதுகாப்பு கருதி, 1வது எதிர்மனுதாரர் மனுதாரர்களை பாதுகாப்பான சூழலில் குடியமர்த்தும் வகையில், தனியாக வீடு 1வது எதிர் மனுதாரருடைய தனிப்பட்ட செலவில் வழிவகை செய்யவும், மேற்படி வீட்டிற்கான மாத வாடகையை 1வது எதிர்மனுதாரரே மாதந்தோறும் தவறாமல் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

மேலும், 1வது எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு அன்றாட தேவைகளான உணவு, உறைவிடம் மற்றும் மருத்துவ செலவினங்களுக்காக மாதந்தேறும் ரூ. 7500/- ஜீவனாம்சமாக வழங்க உத்தரவிடப்படுகிறது. மேலும், 1வது எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு இழைக்கப்பட்ட வன்கொடுமைகளுக்கு இழப்பீடாக ரூ. 2,50,000/- செலுத்த வேண்டும் என்றும், 1வது எதிர்மனுதாரர் வசமுள்ள 1வது மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தங்க நகைகள், பண்ட பாத்திரங்கள், சான்றிதழ்கள் மற்றும் உரிமை ஆவணங்களை 3 மாத காலத்திற்குள் ஒப்படைக்குமாறும் உத்தரவிடப்படுகிறது.

மேற்படி உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜுன் மாதம் 12ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் பகரப்பட்டது.

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI
Date: 2026.06.12 17:52:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

வத்திராயிருப்பு.

**மனுதாரர் தரப்பு சாட்சி**

ம.சா.1 - சந்தோஷிதேவி

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | - | 1ம் புகார்தாரரும், 1ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படத்தின் அசல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.2 | - | 1ம் புகார்தாரர், 1ம் எதிர்மனுதாரர் மீது திருவில்லிபுத்தூர் மகளீர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் |
| ம.சா.ஆ.3 | - | 1ம் புகார்தாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.4 | - | 2ம் மைனர் புகார்தாரர் ராம்கிஷாரின் பிறப்பு சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.5 | - | 3ம் மைனர் புகார்தாரர் ராம்சரண் பிறப்பு சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.6 | - | HMOP.No.58/2019 வழக்கில் நன்செய்யிடையார் ஊரின் கிராம பஞ்சாயத்து செயரான முத்துமாணிக்கம் என்பவர் கொடுத்த சாட்சியத்தின் சான்றிட்ட நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u>**

எ.சா.1 - ரவிக்குமார்

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** -

| | | |
|---|---|---|
| எ.சா.ஆ.1 | - | HMOP.7/2020 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.2 | - | வக்காலத்து நாமாவின் சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.3 | - | புகார் மனுவின் சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.4 | - | மனு ரசீது சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.5 | - | மனுதாரர் எழுதிக்கொடுத்த வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.6 | - | HMOP.58/2019 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.7 | - | 1ம் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் ரசீது சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.8 | - | HMOP.58/2019 வழக்கில் மனுதாரர் அளித்த சாட்சியத்தின் சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.9 | - | 1ம்எதிர்மனுதாரர் 1ம்புகார்தாரரை கேட்டு நீதிமன்றத்தில் GWOP 113/2020 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.10 | - | GWOP 113/2020 வழக்கில் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.11 | - | GWOP 113/2020 வழக்கில் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவாணை சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| எ.சா.ஆ.12 | - | 1ம்மனுதாரர் பெயரில் வீட்டு தீர்வை செலுத்தியதற்கான ரசீது சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.13 | - | HMOP 7/2020 வழக்கில் ஜீவனாம்ச தொகை செலுத்தியதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மெமோவின் சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.14 | - | மனுதாரர் திருவில்லிபுத்தூர் அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.15 | - | எ.சா.ஆ.14 புகார் மனுவிற்கு காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட மனு ஏற்பு ரசீது சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.16 | - | எ.சா.ஆ.14 ன் படி விசாரணைக்கு ஆஜராகி, மனுதாரர் விசாரணயை ஒத்தி வைக்க கேட்டு அளித்த வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் |
| எ.சா.ஆ.17 | - | குற்ற எண்.175/2022 ன் முதல் தகவல் அறிக்கையின் இணையவழி நகல் |
| எ.சா.ஆ.18 | - | குற்ற எண்.174/2022 ன் முதல் தகவல் அறிக்கையின் இணையவழி நகல் |
| எ.சா.ஆ.19 | - | எ.சா.ஆ.14 மனுவை வாபஸ் பெறுவதற்காக மனுதாரர் கொடுத்த வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் |

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI
Date: 2026.06.12 17:53:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

வத்திராயிருப்பு.